# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை
## சட்ட பீடம்

### சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு II – 2022

### ஒப்புரவு மற்றும் நம்பிக்கைகள் சட்டம்
(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

**மூன்று (03)** வினாக்களுக்கு **மட்டும்** விடையளிக்க.
(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

01. 'நீதியை எய்துவதே சட்டம் மற்றும் ஒப்புரவின் உயரிய குறிக்கோளாகும். இருப்பினும், நடைமுறையில், சட்டத்தின் இயல்பானது கடுமையானதாக, நெகிழ்வுத் தன்மையற்றதாக மற்றும் நியாயமற்றதாகக் காணப்படுகின்ற போது நீதியை அடைவதற்கான ஒப்புரவின் அணுகுமுறையானது சட்டத்திலிருந்து வேறுபடுகிறது. சட்டத்தின் உறுதியான தன்மையானது சில வேளைகளில் அது எதற்காக உருவாக்கப்பட்டதோ அந்த நீதியினை எய்த முடியாமைக்கு இட்டுச் செல்கின்றது.'

ஆங்கிலச் சட்டத்தில் ஒப்புரவினுடைய வளர்ச்சியின் பின்னணியில் மேற்போந்த கூற்றினை ஆராய்க.

**(100 புள்ளிகள்)**

02. (அ) மற்றும் (ஆ) பகுதிகள் இரண்டிற்கும் விடையளிக்க.

(அ) Club Horizon ஆனது 2016 இலிருந்து விக்டோரியா ஏரியில் மோட்டார் படகோட்டம் மற்றும் நீர்ச்சறுக்கு என்பவற்றை நடாத்தி வருகின்றது. ஓர் நடைமுறையாக, குறித்த club இனால் சிறிய படகுகள் மாத்திரமே மேற்குறித்த செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன. 2021 இல் கிளிபோர்ட் என்பவன் குறித்த விக்டோரியா ஏரியின் அருகில் கட்டப்பட்ட வீடொன்றில் அவனுடைய குடும்பத்துடன் குடியேறினான். அவன் வசிக்கத் தொடங்கிய ஒரு சில நாட்களின் பின்னர், குறித்த club இனுடைய செயற்பாடுகளிலிருந்து வந்த சத்தமானது சகித்துக்கொள்ள முடியாத அளவில் இருந்ததை உணர்ந்தான். குறித்த club ஆனது சர்வதேச சுற்றுப் போட்டிகளில் கலந்து

கொள்வதற்கு பெரிய சக்திவாய்ந்த படகுகளைப் பயன்படுத்தியது என்பதுடன் அது இரைச்சலான பயிற்சிகளை ஏற்படுத்தியது. சத்தத்தினால் கிளிபோர்ட் தொந்தரைவடைந்தான் என்பதுடன் அச் சத்தத்தின் காரணமாக அவன் இணையத்தளம் மூலமான பல்வேறு சர்வதேச வியாபாரக் கூட்டங்களை இரத்து செய்ய வேண்டியிருந்தது. குறித்த club இன் செயற்பாடுகளினால் ஏற்பட்ட சத்தத்தின் காரணமாக அமைதியான ஒரு சூழல் மற்றும் மகிழ்ச்சியானதும் ஆரோக்கியமானதுமான வாழ்க்கைக்கான உரிமைகளானவை மீறப்படுகின்றதாக அவன் தெரிவிக்கிறான்.

அவனுக்கு கிடைக்கக்கூடியதான ஒப்புரவுப் பரிகாரங்களின் பின்னணியில் கிளிபோர்ட்டிற்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) 2021 இல், மெஸ்ஸி இத்தாலியன் உணவு விற்பனை நிலையம் என்பது கட்டிடத்தின் உரிமையாளனான மைக்கேல் என்பவனுடன் 05 வருடங்களுக்கான ஓர் குத்தகை உடன்படிக்கையில் ஈடுபட்டது. 2022 இல், பிரதானமாக நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையினால் ஏற்பட்ட வியாபாரத்திற்கான வருமான இழப்பின் காரணமாக குறித்த இத்தாலியன் உணவு விற்பனை நிலையமானது அவ் உணவு விற்பனை நிலையத்தினை மூடுவதற்குத் தீர்மானித்தது. இத்தாலியன் உணவு விற்பனை நிலையமானது குறித்த குத்தகை உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்குத் தீர்மானித்ததுடன் மைக்கேலிடமிருந்து மிகுதிப் பணத்தினைக் கோரியது. குறித்த மூடுகையானது குத்தகை உடன்படிக்கையின் வாசகங்களை மீறுவதாக அமையும் என்பதுடன் குறித்த ஒப்பந்தமானது எஞ்சியிருக்கும் குத்தகைக் காலத்திற்கு குறிப்பாக நிறைவேற்றப்படுதல் கட்டாயமாகும் என மைக்கேல் வாதிடுகிறான். அக் குத்தகை உடன்படிக்கையானது உடன்படிக்கையை முடிவுறுத்துதல் தொடர்பிலான எந்தவொரு வாசகத்தினையும் கொண்டிருக்கவில்லை. இத்தாலியன் உணவு விற்பனை நிலையமானது உமது ஆலோசனையை நாடுகின்றது.

ஒப்புரவுப் பரிகாரங்களுடன் தொடர்புடைய கோட்பாடுகளின் பின்னணியில் இத்தாலியன் உணவு விற்பனை நிலையத்திற்கு ஆலோசனை வழங்குக.

**(50 x 2 = 100 புள்ளிகள்)**

03. (அ) மற்றும் (ஆ) பகுதிகள் இரண்டிற்கும் விடையளிக்க.

(அ) 'ஓர் வெளிப்படையான நம்பிக்கையானது அதனை ஆக்குபவர் வலிதான நம்பிக்கையொன்றை ஆக்குவதற்கான சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பில் நிச்சயத்

தன்மையைக் கொண்டிருப்பதனைத் தேவைப்படுத்துகிறது. அத்தகைய தேவைப்பாடுகளை நிறைவேற்றத் தவறுகின்றமையானது வலிதற்ற நம்பிக்கையினைத் தோற்றுவிக்கும்.'

நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பின்னணியில் மேற்போந்த கூற்றினை ஆராய்க.

**(60 புள்ளிகள்)**

(ஆ) காமினி என்பவன் அவனது வீடு மற்றும் ஓர் கார் ஆகியவற்றை அவனது மகளான ரந்தி என்பவளுக்கு மரணசாசனம் மூலம் வழங்குவதற்கு விரும்பினான். காமினியினுடைய இறப்பின் பின்னர் குறித்த ஆதனங்களை ரந்திக்கு கைமாற்றுவதற்கென ஓர் வாய்மொழி மூலமான உடன்படிக்கையின் மீது குறித்த ஆதனங்களை காமினி அவனது நண்பனான ரனில் என்பவனுக்கு கைமாற்றினான். காமினியின் இறப்பின் பின்னர் ரணில் அந்த ஆதனங்களை ரந்திக்கு கைமாற்ற மறுக்கிறான்.

நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகளை மேற்கோள்காட்டி தரப்பட்டுள்ள சூழ்நிலையில் வலிதான நம்பிக்கையொன்று உருவாக்கப்பட்டுள்ளதா என ஆராய்க.

**(40 புள்ளிகள்)**

04. (அ) மற்றும் (ஆ) பகுதிகள் இரண்டிற்கும் விடையளிக்க.

(அ) Paradise Travel Agency (PTA) என்பது யூரோ விமான நிறுவனம் என்பதன் முகவரொருவராக செயற்படுகின்றது. PTA ஆனது பயணச்சீட்டுக்களை விற்பனை செய்கின்றது என்பதுடன் பயணச்சீட்டுக்களின் விற்பனையிலிருந்தான பணத்தினை வைத்திருக்கின்றது. PTA ஆனது நிதி நெருக்கடிக்கு உள்ளாகியது என்பதுடன் அதன் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு பயணச்சீட்டு பணத்தினைப் பயன்படுத்தியது. பின்னர், PTA ஆனது விமான பயணச்சீட்டு பணத்தினை யூரோ விமான நிறுவனத்திற்கு மாற்றுவதற்கு மறுத்தது. யூரோ விமான நிறுவனமானது, பயணச்சீட்டு பணத்தினை ஊதியம் வழங்குவதற்குப் பயன்படுத்துவதற்கு அதிகாரமளித்த PTA இனுடைய இயக்குனர்களுக்கெதிராக வழக்கிடக் கருதுகிறது.

நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பின்னணியில் யூரோ விமான நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) ஈக்விபோர் என்பது இந்து சமுத்திரத்திலுள்ள ஓர் தீவு அரசாகும். ஈக்விபோரில், எரிக் என்பவன் 99 ஏக்கர்கள் தேயிலைப் பெருந்தோட்டத்தினை சொந்தம் கொண்டுள்ளான் என்பதுடன் மேலும் முப்பது ஏக்கர்கள் தேயிலைப் பெருந்தோட்டத்தினை கொள்வனவு செய்ய விரும்பினான். இருப்பினும், 100 ஏக்கர்கள் எனும் ஓர் நிலையினை அடைவதன் மீது தேயிலைப் பெருந்தோட்டங்களை கொள்வனவு செய்தலைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் ஒழுங்குவிதிகள் ஏற்புடையதாகிறது. இவ் ஒழுங்குவிதிகளைத் தவிர்ப்பதற்கு முப்பது ஏக்கர்கள் தேயிலைப் பெருந்தோட்டத்தினை எரிக் அவனது மகளான லிலி என்பவளின் பெயரில் கொள்வனவு செய்தான். இருப்பினும், அவ் முப்பது ஏக்கர்கள் தேயிலைப் பெருந்தோட்டத்தின் உடைமையினை எரிக் கொண்டிருந்தான். வேறொரு முதலீட்டிற்கு பணத்தினை பெறுவதற்காக எரிக் அந்த முப்பது ஏக்கர்கள் தேயிலைப் பெருந்தோட்டத்தினை விற்பதற்கு விரும்புகிறான். ஆனால், அவளே குறித்த முப்பது ஏக்கர்கள் தேயிலைப் பெருந்தோட்டத்தின் உரிமையாளர் எனவும் அவளது ஆதனத்தினை விற்பதற்கு எரிக்கிற்கு எவ்வித உரிமையும் இல்லை எனவும் லிலி கோருகிறாள்.

ஈக்விபோரின் நம்பிக்கைகள் கட்டளைச் சட்டமானது இலங்கையின் நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தினைப் போன்றது என கருதுக. நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பின்னணியில் எரிக்கிற்கு ஆலோசனை வழங்குக

**(50 x 2 = 100 புள்ளிகள்)**

05. சந்திரா தனியார் வைத்தியசாலை (Chandra Hospitals Pvt Ltd) என்பதன் ஓர் ஓய்வுபெற்ற இயக்குனரான வைத்தியர் சந்திரா என்பவர் அவரது இறுதி விருப்பாவணத்தில் பின்வருபவைகளை ஆக்க முயற்சித்தார்:

(அ) பீடத்திலுள்ள வறிய மாணவர்களிடையே அப் பணத்தினை பகிர்வதற்கென TAMSAI மருத்துவ பீடத்தின் பதிவாளருக்கு ரூ. 2 மில்லியன்;

(ஆ) சந்திரா தனியார் வைத்தியசாலையினுடைய ஊழியர்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிகளை வழங்குவதற்கென ரூ. 10 மில்லியன்;

(இ) குரங்கம்மை என அழைக்கப்படும் நோய்க்கு எதிராக தடுப்பூசி ஒன்றினைக் கண்டுபிடிப்பதற்கான ஆய்வினை மேற்கொள்வதற்கென ரூ. 15 மில்லியன்;

(ஈ) நுவர எலியா பிரதேசத்திலுள்ள 'கிரெகரி' தொழுவங்களிலுள்ள குதிரைகளைப் பராமரிப்பதற்கென அத் தொழுவங்களிற்கு ரூ. 1 மில்லியன்;

(உ) சந்திரா வைத்தியசாலையினுடைய பூங்காவில் வைத்தியர் சந்திராவிற்கான நினைவு சின்னமொன்றை நிறுவுவதற்கென ரூ. 500,000.

வைத்தியர் சந்திராவினுடைய இறுதி விருப்பாவணத்திலுள்ள மேற்போந்த வேண்டுதலானது வலிதானதொரு தரும நம்பிக்கையை உருவாக்குகின்றதா என ஆராய்க.

**(20 x 5= 100 புள்ளிகள்)**

06. பாலா என்பவன் கண்டியில் ஓர் வீடு, பதுளையில் ஓர் தேயிலைப் பெருந்தோட்டம், யாழ்ப்பாணத்தில் மூன்று ஏக்கர்கள் காணி மற்றும் கொழும்பில் இரண்டு அடுக்குமாடிக் குடியிருப்புகள் என்பவற்றைச் சொந்தங் கொண்டிருந்தான். பாலாவிற்கு கவிதா மற்றும் விமலா ஆகிய இரு பெண் பிள்ளைகளும் குமார் எனும் மகனொருவனும் இருந்தனர். பின்வருவனவற்றுக்காக அவ் ஆதனங்களுக்கு நம்பிக்கையாளர்களாக நிவிலன் மற்றும் ராஜா ஆகியோரை அவன் நியமித்தான்:

- கண்டியிலுள்ள பாலாவினுடைய வீடானது அவனது சகோதரியின் மகனைக் கவிதா திருமணம் செய்வாளாயின் அவளது திருமணத்தின் போது அன்பளிப்பாக அவளுக்கு மாற்றப்பட வேண்டும். அவள் அவ்வாறு அவனை திருமணஞ் செய்யத் தவறின், குறித்த வீட்டினை விற்க வேண்டும் என்பதுடன் அப் பணத்தினை மூன்று பிள்ளைகளிடையே சமமாகப் பிரிப்பதற்கும்.
- தேயிலைப் பெருந் தோட்டத்தினை விற்பனை செய்வதற்கும் அத்துடன் அப் பணத்தினை விமலாவின் நன்மைக்காக அவளது பெயரில் நிலையான வைப்பொன்றில் வைப்பிலிடுவதற்கும்.
- குமார் பதினெட்டு வயதை அடைகின்ற போது பாலாவினுடைய மூன்று ஏக்கர்கள் காணி விற்பனை செய்யப்படுவதற்கும் அத்துடன் அப் பணத்தினை பிள்ளைகளிடையே சமமாகப் பிரிப்பதற்கும்.
- பாலாவினுடைய அடுக்குமாடிக் குடியிருப்புகள் வாடகைக்கு விடப்படுவதற்கும் அவ் வாடகையினை பிள்ளைகளுக்கு பயனுள்ளதான முதலீடுகளுக்கு பயன்படுத்துவதற்கும்.

கவிதா அவளுடைய கல்லூரி நண்பனுடன் உறவொன்றைக் கொண்டிருந்தாள் என்பதுடன் அவனைத் திருமணம் செய்துகொண்டாள். நம்பிக்கையாளர்களுக்கு கமிஷனொன்றைச் செலுத்தி கவிதா கண்டியிலுள்ள வீட்டினை அவளது பெயரில் கைமாற்றிப் பெற்றாள். குறித்த தேயிலைப் பெருந்தோட்டமானது நிவிலன் மற்றும் ராஜாவினால் விற்கப்பட்டதுடன், அப் பணமானது நிவிலன் மற்றும் ராஜாவின் பெயர்களில் இணைந்த கணக்கொன்றில் வைப்பிலிடப்பட்டது. கவிதா, குமார் மற்றும் விமலா ஆகியோர் பதினெட்டு வயதினை

அடைந்தனர் என்பதுடன் அவர்கள் குறித்த மூன்று ஏக்கர்கள் காணியினை விற்பனை செய்யாது தமது பெயர்களில் அதை சமமாக மாற்றுவதற்கு விரும்புகின்றனர். பாலாவினுடைய அடுக்குமாடிக் குடியிருப்புகளிலிருந்து பெறப்பட்ட வாடகைப் பணமானது கவிதா, குமார், விமலா மற்றும் ராஜாவிற்கு தெரியாமல் தனது பெயரில் வீடொன்றைக் கொள்வனவு செய்வதற்கு நிவிலனால் பயன்படுத்தப்பட்டது.

மேற்போந்த சூழ்நிலைகளிலுள்ள சட்டப் பிணக்குகள் தொடர்பில் ஆராய்வதுடன், நம்பிக்கைகள் கட்டளைச் சட்ட ஏற்பாடுகளின் பின்னணியில் திறத்தவர்களுக்கு அவர்களது சட்டக் கடமைகள் மற்றும் உரிமைகள் தொடர்பில் ஆலோசனை வழங்குக.

**(100 புள்ளிகள்)**

***************